

## கழகத் தலைவரிடம் அனுமதி பெற்று விரைவில் அறிவிப்பு வரும்:

# டிசம்பர் 14-ஆம் தேதி, திருவண்ணாமலையில் இளைஞர் அணி நிர்வாகிகளுக்கு மண்டல அளவிலான சந்திப்பு!

## ஆவடி இளைஞர் அணி நிர்வாகிகள் அறிமுகக் கூட்டத்தில், துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் எழுச்சிமிக்க உரை!

*திருவள்ளூர்,நவ.26-*

**திருவள்ளூர் மத்திய மாவட்டத்திற்கு உட்பட்ட ஆவடி சட்டமன்றத் தொகுதிக்கான ஒன்றிய-நகர- பகுதி-கிளை- வார்டு மற்றும் பாகங்களுக்கு புதிதாக நியமிக்கப்பட்ட நிர்வாகிகளுக்கான அறிமுகக் கூட்டத்தில், கழக இளைஞர் அணிச் செயலாளரும் துணை முதலமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் கலந்து கொண்டு எழுச்சிமிக்க உரையாற்றினார்.**

**அப்போது தமிழ்நாடு முழுவதும் நியமிக்கப்பட்டு வரும் இளைஞர் அணி நிர்வாகிகளுக்கான சந்திப்பை, மண்டலவாரியாக நடத்த திட்டமிட்டுள்ளோம். வருகிற டிசம்பர் 14-ஆம் தேதி, திருவண்ணாமலையில் இளைஞர் அணி நிர்வாகிகளுக்கு மண்டல அளவிலான சந்திப்பை நடத்த இருக்கிறோம். அதற்கான அறிவிப்பை விரைவில் நம் கழகத் தலைவர் அவர்கள் வெளியிடுவார்கள்" என்று குறிப்பிட்டார்.**

**கழக இளைஞர் அணிச் செயலாளரும் துணை முதலமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் ஆற்றிய உரை வருமாறு:**

திருவள்ளூர் மத்திய மாவட்டம், ஆவடி சட்டமன்றத் தொகுதிக்கு உட்பட்ட, வட்டம் மற்றும் கிளை இளைஞர் அணி அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் மற்றும் பாக அமைப்பாளர்களுக்கான அறிமுகக் கூட்டத்தில் உங்களை எல்லாம் சந்திப்பதில் மிகுந்த மகிழ்ச்சி அடைகிறேன்.

### தேர்தல் நிதி 1.5 கோடி ரூபாய்

முதலில் இந்த திருவள்ளூர் மாவட்டத்துக்கு எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். மாவட்டச் செயலாளரும், அமைச்சர் அண்ணன் ஆவடி நாசர் அவர்கள் தேர்தல் நிதியாக 1.5 கோடி ரூபாயை இன்று இளைஞர் அணிச் செயலாளரான என்னிடம் ஒப்படைத்துள்ளார். அதற்கு எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அதேபோல, வந்திருக்கின்ற அனைத்து அமைப்பாளர்களுக்கும் இளைஞர் அணியின் முத்தமிழறிஞர் பதிப்பகத்தின் வெளியீடான காலத்தின் நிறம் கருப்பு-சிவப்பு புத்தகத்தை அனைத்து அமைப்பாளர்களுக்கும் வழங்க வேண்டும் என்று, அதற்கான காசோலையாக 6 லட்சத்து 75 ஆயிரம் ரூபாயை வழங்கி இருக்கிறார். அந்தப் புத்தகம் வழங்குவதற்கான மொத்த செலவையும் அவர் ஏற்றுள்ளார். அதற்கும் எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

சகோதரர் பிரபு கஜேந்திரன் அவர்கள் இளைஞர் அணியின் வளர்ச்சி நிதியாக 10 லட்சம் ரூபாயை வழங்கி இருக்கிறார். அவருக்கும் இளைஞர் அணியின் சார்பாக எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

### நிர்வாகிகள் அறிமுகக் கூட்டம்

பொதுவாக, இளைஞர் அணியின் நிர்வாகிகள் அறிமுகக் கூட்டம் எந்த மாவட்டத்தில் நடந்தாலும், அங்கு புதிதாக நியமிக்கப்பட்டுள்ள நிர்வாகிகளைச் சந்தித்து, அவர்களுடன் உரையாடி அவர்களுடன் புகைப்படம் எடுத்துக் கொள்வது என் வழக்கம். கிட்டத்தட்ட 50 சதவிகித மாவட்டங்களில் அந்த நிகழ்ச்சியை முடித்துவிட்டேன்.

ஒவ்வொரு மாவட்டத்திலும் அந்த நிகழ்ச்சி ஒரு சிறிய அரங்கத்தில்தான் நடக்கும். அங்கு இருக்கின்ற மாவட்டக் கழக அலுவலகத்திலோ, திருமண மண்டபத்திலோ நிகழ்ச்சியை ஏற்பாடு செய்திருப்பார்கள். ஆனால், இந்த திருவள்ளூர் மாவட்டம் வசதியான மாவட்டம். கிட்டத்தட்ட ஒரு மாளிகை மாதிரியான அரங்கத்தில் இந்த நிகழ்ச்சியை ஏற்பாடு செய்து, போட்டிப் போட்டுக் கொண்டு தேர்தல் நிதியையும், இளைஞர் அணிக்கு வளர்ச்சி நிதியையும் அளித்திருக்கிறார்கள்.

மாவட்டச் செயலாளர்களுக்கு இந்த நேரத்தில் நினைவூட்ட விரும்புவது, 1.5 கோடி காசோலையை என்னிடம் கொடுக்கும்போது சொன்னார். தேர்தல் நிதியாக ஒன்றரைக் கோடியும், இளைஞர் அணிக்கு வளர்ச்சி நிதியாக 20 லட்சம் தரப்போகிறேன் என்று சொன்னார். நான் ஒரு காசோலைதான் இருக்கிறது, இன்னொரு காசோலை எங்கு என்று கேட்டேன். நிச்சயமாகக் கொடுத்துவிடுவேன் என்று சொன்னார். அதை இந்த நேரத்தில் நினைவூட்ட விரும்புகிறேன். அதற்கு மட்டும் நன்றி சொல்லவில்லை, இன்னொரு விஷயத்திற்காகவும் திருவள்ளூர் மாவட்டத்துக்கு நன்றி சொல்ல வேண்டும்.

### முற்போக்கு புத்தகக் காட்சி

சமீபத்தில் சென்னை, வள்ளுவர் கோட்டத்தில் இளைஞர் அணி சார்பாக 9 நாட்கள், 10 அமர்வுகள், முற்போக்கு புத்தகக் காட்சி, `காலத்தின் நிறம் கருப்பு-சிவப்பு' நூல் வெளியீட்டு விழா என்று மிக எழுச்சியுடன் அறிவுத் திருவிழாவை இளைஞர் அணியின் சார்பாக நாம் நடத்திக் காட்டினோம். அதில் சென்னைக்கு அடுத்து, அதிகமாக பங்கேற்ற மாவட்டம் என்றால் திருவள்ளூர் மத்திய மாவட்டம்தான். அதற்கு இந்த நேரத்தில் எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

எனக்கு எத்தனையோ பொறுப்புகள் வந்தாலும், கழகத்தின் இளைஞர் அணிச் செயலாளர் என்ற பொறுப்புதான் என் மனதுக்கு நெருக்கமான பொறுப்பு என்பதை உணர்ந்தவன் நான்.

> **“உங்களுக்கெல்லாம் ஒரேயொரு வாக்குறுதியைக் கொடுக்கிறேன். இளைஞர் அணியில் நீங்கள் சரியாகப் பணியாற்றினீர்கள் என்றால், நிச்சயம் உங்களுக்கான அங்கீகாரம் சரியான நேரத்தில் நம் தலைவர் அவர்கள் நிச்சயம் கொடுப்பார். அதற்கு இந்த மேடையே ஒரு சிறந்த உதாரணம்.”**

பொதுவாக, மற்ற கட்சிகளுக்கு வரலாறே இருக்காது. சில கட்சிகளுக்குச் சின்ன வரலாறு இருக்கும். ஆனால், நம் திராவிட முன்னேற்றக் கழகத்தில் மட்டும்தான், கழகத்தின் இளைஞர் அணிக்கு என்று தனி வரலாறு உண்டு.

1980-ஆம் ஆண்டு மதுரை ஜான்சிராணி பூங்காவில் கலைஞர் அவர்களும், இனமானப் பேராசிரியர் அவர்களும் நம் தலைவரிடம் ஒப்படைத்ததுதான் திராவிட முன்னேற்றக் கழகத்தின் நம் இளைஞர் அணி. அதற்குப் பிறகு, 45 ஆண்டு காலம், தமிழ்நாடு முழுவதும் களத்தில் இறங்கி, நம் தலைவர் கட்டிக் காத்த அணி என்றால், அது தி.மு.க-வின் இளைஞர் அணி என்ற பெருமை நம் அணிக்கு உண்டு.

கழகத்தில் பல்வேறு அணிகள் இருக்கின்றன. ஆனால், முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அவர்களால் எப்போதும் கழகத்தின் முதன்மை அணி என்று பாராட்டைப் பெற்ற அணி என்ற பெருமை நம் இளைஞர் அணிக்கு இருக்கிறது.

அப்படிப்பட்ட அணியில் நீங்களெல்லாம் இன்றைக்கு மிக மிக முக்கியமான பொறுப்புக்கு வந்துள்ளீர்கள். இங்கே இளைஞர் அணி நிர்வாகிகள் மட்டுமல்ல, மாவட்ட - ஒன்றிய - பகுதி - வட்டக் கழக நிர்வாகிகளும் வந்து இருக்கிறீர்கள். அவர்களுக்கு இந்த நேரத்தில் எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இளைஞர் அணி இன்றைக்கு இந்த அளவுக்கு வளர்ந்திருக்கிறது என்றால், அதற்கு உங்களின் ஒத்துழைப்பும், அரவணைப்பும் மிக முக்கியக் காரணம்.

இளைஞர் அணிக்கு, சமூக வலைத்தளத்திலும் இளைஞர்கள் வேண்டும் என்று கழக மாவட்டத்துக்கு ஒரு சமூக வலைதள மாவட்ட துணை அமைப்பாளரை நியமித்துக் கொண்டு இருக்கிறோம். இன்றைக்கு இந்தியாவில் பல கட்சிகள், பூத் கமிட்டி அமைக்கவே சிரமப்படுகிற நேரத்தில், பூத்துக்கு ஒரு இளைஞர் அணி அமைப்பாளரை நாம் நியமித்து இருக்கிறோம். இது மிகப்பெரிய சாதனை.

புதிதாகப் பொறுப்புக்கு வந்திருக்கின்ற நீங்கள், சாதாரணமாக இந்த இடத்துக்கு வரவில்லை. யாருடைய பரிந்துரையின் மூலமாகவும் வந்துவிடவில்லை. முதலில், மாவட்டக் கழகத்தில் இருந்து, பகுதி, வட்டச் செயலாளர்களின் பரிந்துரைகளை வாங்கினோம். அதன்பிறகு அன்பகத்தில் இதற்காகவே தனியாக ஒரு குழு அமைத்து, பரிந்துரை செய்யப்பட்ட ஒவ்வொரு நபருக்கும் தனித்தனியாக அலைபேசியில் பேசினோம்.

### பதவி அல்ல, பொறுப்பு

அதில், உங்களின் பின்னணி, கொள்கைப் பற்று, கழக உணர்வு, சமூக வலைதள அறிவு என எல்லாவற்றையும் கணக்கில் எடுத்துக் கொண்டு, உங்களை இந்தப் பொறுப்புக்குக் கொண்டு வந்து இருக்கிறோம். உங்களுக்குக் கொடுத்து இருப்பது, பதவி அல்ல, பொறுப்பு என்பதை நீங்கள் உணர்ந்து செயல்பட வேண்டும்.

இந்த நேரத்தில் உங்களுக்கெல்லாம் ஒரேயொரு வாக்குறுதியைக் கொடுக்கிறேன். இளைஞர் அணியில் நீங்கள் சரியாகப் பணியாற்றினீர்கள் என்றால், நிச்சயம் உங்களுக்கான அங்கீகாரம் சரியான நேரத்தில் நம் தலைவர் அவர்கள் நிச்சயம் கொடுப்பார். அதற்கு இந்த மேடையே ஒரு சிறந்த உதாரணம்.

மாவட்டக் கழகச் செயலாளராக, மாண்புமிகு அமைச்சராக இருக்கிற அண்ணன் ஆவடி நாசர் அவர்கள், இளைஞர் அணியில்தான் பயணத்தைத் தொடங்கினார். தலைவர் அவர்கள் இளைஞர் அணியைத் தொடங்கிய போது, தலைவரின் முன்னணித் தளபதிகளில் ஒருவராக இருந்து செயல்பட்டவர்தான் அண்ணன் ஆவடி நாசர் அவர்கள்.

இளைஞர் அணி கட்டமைப்பை உருவாக்க அவர் ஆற்றிய பணிகள் ஏராளம். அதனால்தான் இன்றைக்கும் இளைஞர் அணிக்கு முன்னுரிமை கொடுக்கிற மாவட்டச் செயலாளராக இருக்கிறார். அவரின் பணிகள் மூலமாக மாவட்டச் செயலாளராகவும், அமைச்சராகவும் மிகச் சிறப்பாகச் செயல்பட்டுக் கொண்டு இருக்கிறார்.




### பொறுப்பு உயர்வு

அதே போல, இந்த மண்டலத்தின் பொறுப்பாளர், மாநிலத் துணைச் செயலாளர் சகோதரர் அப்துல் மாலிக் அவர்கள், மாவட்டத் துணை அமைப்பாளராக, மாவட்ட அமைப்பாளராகச் சிறப்பாகச் செயல்பட்டு, இன்றைக்குத் தலைவர் அவர்களால் மாநிலத் துணைச் செயலாளராகப் பொறுப்பு உயர்வு பெற்றுள்ளார்.

அதேபோல இளைஞர் அணியின் மாநிலத் துணைச் செயலாளர் சகோதரர் பிரபு கஜேந்திரன் இங்கே இருக்கிறார். உங்கள் பகுதியைச் சேர்ந்தவர். அவரின் தந்தையார் கஜேந்திரன் அவர்கள், இளைஞர் அணியில் மாவட்ட அமைப்பாளராகப் பணியாற்றியவர். இன்றைக்கு அவர் வழியில், சகோதரர் பிரபுவும் இளைஞர் அணியில் சிறப்பாகப் பணியாற்றிக் கொண்டிருக்கிறார்.

நகரக் கழகப் பொறுப்பாளர், திருவேற்காடு நகர்மன்றத் தலைவர், ஒருங்கிணைந்த திருவள்ளூர் மாவட்டத்துக்கான மாவட்டத் துணை அமைப்பாளர் என்று பல்வேறு பொறுப்புகளில் பணியாற்றி, அதன் பிறகு தலைவர் அவர்களால் மாவட்ட அமைப்பாளராக உயர்த்தப்பட்டு, இன்றைக்குத் தலைவர் அவர்கள் மாநிலத் துணைச் செயலாளராகப் பணியாற்றிக் கொண்டு இருக்கிறார்.

### கப்பலில் மாலுமியாகப் பணி

சகோதரர் சுரேஷ்குமார் அவர்கள், இங்கே இருக்கிறார். கப்பலில் மாலுமியாகப் பணியாற்றிய அவர், கழகத்தின் மீது ஏற்பட்ட பற்றால், கழகத்தில் இணைந்து சிறப்பாகப் பணியாற்றுகிறார். அவரின் கழகப்பணியைப் பார்த்து நம் தலைவர் அவர்கள் அவருக்கு மாணவரணியில் பொறுப்பு கொடுத்தார்கள்.

ஒன்றிய, மாவட்ட மாணவர் அணி அமைப்பாளராக அவர் சிறப்பாகச் செயல்பட்டு வருவதைப் பார்த்து, அவரை இளைஞர் அணியின் மாவட்ட அமைப்பாளராகத் தலைவர் அவர்களால் உயர்த்தப்பட்டுள்ளார்.

ஆவடி மாநகர இளைஞர் அணி அமைப்பாளர் சகோதரர் துர்கா பிரசாத்தும் இளைஞர் அணியில் உறுப்பினராகக் கழகப்பணியைத் தொடங்கியவர். இவர்கள் மட்டுமல்ல, இங்கே இருக்கிற மாவட்ட, மாநகர, துணை அமைப்பாளர்களில் 90 சதவிகிதப் பேர், ஒன்றியம், நகரம், மாநகரத்தில் இளைஞர் அணியின் அமைப்பாளர், துணை அமைப்பாளர்களாகச் செயல்பட்டு இன்றைக்குப் பொறுப்பு உயர்வு பெற்றுள்ளார்கள்.

### உழைக்கத் தயாரா? உயர்த்த தயார்!

மாவட்டப் பொருளாளர் நரேஷ்குமார், ஒன்றியச் செயலாளர் கமலேஷ், நகரச் செயலாளர் மூர்த்தி, பகுதிக் கழகச் செயலாளர் நாராயண பிரசாத் இப்படித் தாய்க்கழகத்தில் இருக்கும் பலரும் இளைஞர் அணிதான் பயிற்சி கொடுத்தது.

அமைச்சர்களாக, நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்களாக, உள்ளாட்சி அமைப்புகளில் பிரதிநிதிகளாக, இன்னும் சொல்லப் போனால், கழகத்தின் தலைவராக இருப்பதும், இளைஞர் அணியில் இருந்து வந்தவர்தான்.

இன்றைக்குத் தமிழ்நாட்டின் முதலமைச்சரையும், துணை முதலமைச்சரையும் கொடுத்தது, திராவிட முன்னேற்றக் கழகத்தின் இளைஞர் அணிதான் என்பதை நீங்கள் புரிந்துகொள்ள வேண்டும். அப்படிப்பட்ட சிறப்பான அணிக்கு நீங்கள் அனைவரும் வந்திருக்கிறீர்கள். நீங்கள் உழைக்கத் தயாராக இருந்தால், உங்களை உயர்த்த நாங்கள் தயாராக இருக்கிறோம் என்பதை இங்கு கூறிக் கொள்ள விரும்புகிறேன்.

இன்று நாங்கள் மேடையில் அமர்ந்திருக்கலாம், நீங்கள் கீழே பார்வையாளராக அமர்ந்திருக்கலாம். ஆனால், வருங்காலத்தில் உங்கள் உழைப்பின் மூலம் நீங்கள் அனைவரும் மேடைக்கு மேல் வந்தாக வேண்டும். அதற்கு மேடைக்கு மேல் இருக்கிற நாங்கள் வழிவிட வேண்டும். ஏதோ பொறுப்பு வாங்கி விட்டோம், முரசொலியில் பெயர் அறிவிப்பு வந்து விட்டது, நான்கு ஃபிளக்ஸ் பேனர் வைத்தோம், விளம்பரம் கொடுத்தோம், வாட்ஸ்ஆப்பில் ஸ்டேட்டஸ் போட்டோம் என்று முடிவதில்லை, இளைஞர் அணியின் பணி.

நான் இங்கு வரும்போது ஆரவாரத்துடன் வரவேற்றீர்கள். வெறும் கைதட்டி கலைகிற கூட்டம் கிடையாது இளைஞர் அணி கூட்டம். களத்தில் இறங்கி, மக்களைச் சந்தித்து, தலைவர் என்ன கட்டளையிடுகிறாரோ அவற்றையெல்லாம் வெற்றிக்கரமாகச் செய்துகாட்டும் கூட்டம்தான், இளைஞர் அணிக் கூட்டம் என்பதை நீங்கள் நிரூபிக்க வேண்டும்.

உங்கள் அனைவருக்கும் மினிட் புத்தகம் கொடுக்கப்பட்டிருக்கும். அந்த மினிட் புத்தகங்களை நீங்கள் சரியாகப் பராமரியுங்கள். உங்களின் பணிகளை அதில் நீங்கள் பதிவு செய்ய வேண்டும். ஒரு சின்னத் தவறுக்கும் நீங்கள் இடம் கொடுக்கக் கூடாது. இன்றைக்கு நம் முதலமைச்சர் மீதும், அரசின் மீதும் எந்தக் குற்றச்சாட்டும் சொல்ல முடியாத வகையில் சிறப்பாகச் செயல்பட்டுக் கொண்டு இருக்கிறோம்.

ஆனால் பத்திரிகையாளர்கள், செய்தி தொலைக்காட்சிகள் காத்துக் கொண்டு இருக்கிறார்கள். திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சார்ந்தவர்கள் ஏதாவது தவறு செய்துவிட மாட்டார்களா, அதிலும் குறிப்பாக இளைஞர் அணியைச் சேர்ந்த நிர்வாகிகள் ஏதாவது தவறு செய்துவிட மாட்டார்களா, அதை வைத்து இயக்கத்தின் மீதும், தலைவரின் மீதும் ஏதாவது பொய்ப் பிரச்சாரத்தைப் பரப்ப முடியாதா என்று காத்துக் கொண்டிருக்கிறார்கள். ஏதாவது அவதூறு பரப்பலாம் என்று காத்துக் கொண்டு இருக்கிறார்கள். நீங்கள் ஒவ்வொருத்தரும் மிகவும் கவனத்துடன் செயல்பட வேண்டும். பொறுப்பாகச் செயல்பட வேண்டும்.

நீங்கள் ஒவ்வொருவரும் நீங்கள் வசிக்கக் கூடிய பகுதிகளில் இருந்து ஒரு 60 வாக்காளர்களை உங்கள் கட்டுப்பாட்டில் வைத்திருந்தீர்கள் என்றால், உங்களை யாராலும் தடுக்கவோ, தவிர்க்கவோ முடியாது. எந்தப் பணியைச் செய்தாலும், அதை மாவட்ட, பகுதி, ஒன்றிய அமைப்பாளர்களிடம் சொல்லிவிட்டு, அவர்களுடன் கலந்து ஆலோசனை செய்து, அவர்களின் அனுமதியைப் பெற்று அந்தப் பணியைச் செய்யுங்கள். எப்படி களத்தில் சிறப்பாகச் செயல்படுகிறீர்களோ, அதேமாதிரி சமூக வலைத்தளங்களிலும் நீங்கள் சிறப்பாகச் செயல்பட வேண்டும்.

உங்களுக்கு அன்பகத்திலிருந்து வரும் தகவல்கள் செய்திகள் வீடியோக்களை பின்தொடருங்கள். தலைவர் பக்கம், இளைஞர் அணி பக்கம், உங்கள் மாவட்டச் செயலாளர் பக்கம் எல்லாவற்றையும் தொடர்ந்து பின்பற்றுங்கள். தினசரி காலையில் எழுந்தவுடன் `முரசொலி' நாளிதழைப் படியுங்கள். அதைப் படித்தால் தான் அன்றைக்குத் தலைவரின் அறிக்கை என்ன, தமிழ்நாட்டு அரசியலில் அன்றைக்கு என்ன பிரச்சினை, தலைவரின் நிகழ்ச்சிகள் என்ன என்பதை அறிந்து கொள்ள முடியும்.

### பாசறைப் பக்கம் படியுங்கள்

குறிப்பாக இளைஞர் அணிக்கு என்று தலைவர் ஒரு பக்கத்தைக் கொடுத்திருக்கிறார். அது தான் `முரசொலி'யின் `கடைசிப் பக்கம்', `பாசறைப் பக்கம்'. படிப்பதற்கு மிகவும் எளிதாக இருக்கும். தயவுசெய்து அதைப் படியுங்கள். அப்போதுதான் உங்களின் அரசியல் அறிவை நீங்கள் வளர்த்துக் கொள்ள முடியும். நம் மீது வைக்கப்படும் விமர்சனங்களையும் சேர்த்துப் படியுங்கள். அதற்கான பதில்களைத் தேடுங்கள்.

தொடர்ச்சி 13 – ஆம் பக்கம்